
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மே 18, 2024

Weekly E-paper ● May 18, 2024



# வீரவணக்கம்

சுப.வீரபாண்டியன்

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை வழங்கும் கருஞ்சட்டை விருதுகள்

சாரதாதேவி

## அரசியல் மாண்புக்கு இழுக்கு

தலையங்கம்

## விரக்தியின் விளிம்பில் மோடி...!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மே 18, 2024

Weekly E-paper ● May 18, 2024


# வீரவணக்கம்

## சுப.வீரபாண்டியன்



2009 மே 18 – அந்தத் துயரச் செய்தி உலகெங்கும் பரவிற்று! இன்றுவரையில் அதை ஏற்றும், மறுத்தும், கருத்துகள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. எவ்வாறாயினும் அந்த நாளுக்குப் பிறகு, இன்றுவரையில், தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களிடமிருந்து எந்தச் செய்தியும், அறிக்கையும் இல்லை. அந்த அமைப்பின் போராட்டம் குறித்தோ, அதன் செயல்பாடுகள் குறித்தோ எதுவும் வெளிப்படவில்லை.

1956 முதற்கொண்டே, தமிழ்நாட்டில் ஈழப் போராட்டத்திற்கான ஆதரவு இருந்து வந்தது. 1983 ஜூலை முதல், அங்கிங்கெனாதபடி தமிழ்நாடு எங்கும் கட்சிகளின் எல்லைகளை எல்லாம் தாண்டி, விடுதலைப் புலிகளுக்கான ஆதரவுக் குரல் கேட்டது!

1991 மே மாதம் நிகழ்ந்த ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு, காட்சிகள் மாறின. இருப்பினும், விடுதலைப் புலிகளுக்கும், ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழ்நாட்டில் ஆதரவு இருந்து கொண்டே இருந்தது!

1991 இல் அதிமுக வெற்றி பெற்று, ஜெயலலிதா முதலமைச்சராக ஆனதும், புலிகளின் ஆதரவாளர்கள் தமிழ்நாட்டில் மிகக் கடுமையாக ஒடுக்கப்பட்டார்கள்.

1992 மே 14 அன்று விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டது. இன்று வரை அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. முதன் முதலாக அது தடை செய்யப்பட்ட நேரத்தில், அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா அதை வரவேற்று, ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்தார். தலைவர் கலைஞர் அவர்கள் அதனை எதிர்த்து அறிக்கை வெளியிட்டார். 15.05.92 ஆம் நாளிட்ட அனைத்து ஏடுகளிலும் இருவரின் அறிக்கைகளும் வெளிவந்துள்ளன.

தலைவர் கலைஞர் தன் அறிக்கையில், ஒன்றிய அரசை நோக்கி மூன்று கேள்விகளை முன் வைத்திருந்தார்.


1. புலிகளைத் தடை செய்துவிட்டு, யாருடன் பேச்சு வார்த்தை நடத்தப் போகிறீர்கள்?

2. தடையைப் பயன்படுத்தி ஜெயலலிதா தன் காழ்ப்புணர்வுகளை வெளிப்படுத்த மாட்டார் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?

3. தமிழ்நாட்டில் புலிகளை ஒழித்து விட்டோம் என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். அப்படியானால், இல்லாத இயக்கத்திற்கு ஏன் தடை விதிக்க வேண்டும்?

கலைஞரின் வினாக்களுக்கு யாரும் விடை சொல்லவில்லை. ஆனால் புலி என்று பேசினாலே தமிழ்நாட்டில் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அது மட்டுமல்லாமல், எம்ஜிஆர் காலத்தில் ஈழத்துப் பிள்ளைகளுக்கு கல்வி நிலையங்களில் வழங்கப்பட்டிருந்த இடங்களையும் ஜெயலலிதா அரசு மறுத்துவிட்டது. மீண்டும் 1996 இல் கலைஞர் முதலமைச்சராக ஆன பிறகு தான், அவர்களுக்கு மறுபடியும் கல்விக் கதவுகள் திறக்கப்பட்டன. அதற்கான அரசு ஆணை இங்கு தரப்பட்டுள்ளது.



2001 இல் மீண்டும் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன், ஈழ ஆதரவாளர்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர்.

2001 ஆட்சிக் காலத்தில், பிரபாகரனை இங்கு அழைத்து வந்து தூக்கில் ஏற்ற வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் ஜெயலலிதா !

ஈழ மக்களுக்கும், ஈழ ஆதரவாளர்களுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் நேர் எதிரானவராக இருந்த ஜெயலலிதாவை, 2011 தேர்தலில் ஆதரித்து, இலை மலர்ந்தால் ஈழம் மலரும் என்று பேசியவர்கள் தான், இன்று தாங்கள் பிரபாகரனின் பிள்ளைகள் என்றும், பிரபாகரனின் வளர்ப்புகள் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

இன்று தங்களைப் புலிகளின் வாரிசுகள் என்று சற்றும் வெட்கமில்லாமல் மேடைகளில் பேசுகின்ற சில பிழைப்புவாதிகள், 1991 மற்றும் 2001 காலகட்டங்களில், தடாவும், பொடாவும் கோலோச்சிக் கொண்டிருந்த நேரத்தில், சிறைப்பட்டவர்களைச் சந்திப்பதற்காகக் கூட, சிறைப்பக்கம் வராதவர்கள்!

இந்த உண்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்காக, மிக மிக ஆபாசமான சொற்களில், இந்தக் கட்டுரைக்குப் பின்னூட்டங்கள் வரும் என்பதை நாம் அறிவோம்! அவ்வளவு இழிவான, ஆபாசமான சொற்களைப் பயன்படுத்துகிறவர்கள், தாங்கள் புலிகளின் வாரிசுகள் என்றும் சொல்லிக் கொள்வது, மாவீரன் பிரபாகரனுக்கும், ஈழ மக்களுக்கும் அவமானம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்!

ஈழ விடுதலைப் போரில் உயிர் துறந்த அனைவருக்கும் நம் வீரவணக்கம்!

●

# திராவிட இயக்கத் தமிழர் பேரவை வழங்கும் கருஞ்சட்டை விருதுகள்!


சாரதாதேவி

உலகெங்கிலும், பல்வேறு நாடுகளில் அந்தந்த அரசாங்கங்கள், பல்வேறு துறைகளில், சிறந்த குடிமக்களுக்கு, உயரிய விருதுகள் வழங்கி சிறப்பிக்கின்றன. அரசாங்கங்கள் கடந்து, பல்வேறு அமைப்புகளும் தங்கள் கொள்கைகளுக்குத் துணை நிற்கும் பல சிறந்த ஆளுமைகளைக் கண்டுபிடித்து, அவர்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்துத், தங்கள் கொள்கைகள் சார்ந்த பல்வேறு பெயர்களில், விருதுகள் வழங்கி சிறப்பிக்கிறார்கள்

அந்த வகையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை, கடந்த 2022 ஆம் ஆண்டு முதல், பெரியாரியக் கொள்கைகளுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்த சிறந்த மூன்று ஆளுமைகளைத் தேர்ந்தெடுத்து, “கருஞ்சட்டை விருது”கள் வழங்கி வருகிறது.







முதலாவதாக, தங்கள் அமைப்புக்குள்ளாகவே, எந்த கைம்மாறும் இன்றி தங்கள் உழைப்பைச் செலுத்தி வரும் மூத்த தோழர்களில் ஒருவர், இரண்டாவதாக, பெரியாரிய சிந்தனைகளைப் பரப்பும் வகையில் களப்பணியோ அல்லது ஆய்வுப் பணிகளோ மேற்கொண்டு,

தொடர்ச்சியாக இயங்கும் பெரியார் தொண்டர் ஒருவர், மூன்றாவதாக, கட்சி அரசியலில் ஈடுபட்டு பெரிய பலன்கள் ஏதுமின்றி, அமைதியாகக் கொள்கை வழி நின்று களப்பணியாற்றி வரும் தி.மு.க வைச் சார்ந்த தொண்டர் ஒருவர் என மூன்று பேரை ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுப்பது என முடிவானது. இந்த மூன்று பேரையும் தேர்ந்தெடுக்க அமைப்பிலிருந்து ஐந்து பேர் கொண்ட ஒரு குழு தலைவர் அவர்களால் நியமிக்கப்படும்.

இந்த முடிவுகளின் படி, முதல் ஆண்டான 2022 ஆம் ஆண்டு, பேரவையின் மூத்த தோழரும், வரலாற்று எழுத்தாளருமான தோழர் எழில் இளங்கோவன் அவர்களுக்கும், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தோழர் கலி.பூங்குன்றன் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அய்யா சின்னராசு அவர்களுக்கும் ஏப்ரல் 29, 2022 அன்று சென்னை, சர் பிட்டி தியாகராயர் அரங்கில், அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களால் கருஞ்சட்டை விருதுகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் ஆண்டான 2023 ஆம் ஆண்டு, தலைவருடன் நீண்ட காலமாக பயணிக்கும், பேரவையின் துடிப்பு மிக்க பெரியாரிய கருஞ்சட்டைப் போராளி தோழர் மு.மாறன் அவர்களுக்கும், திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளரும், வழக்கறிஞரும், பெரியாரியப் பெண்ணியவாதியுமான தோழர் அருள்மொழி அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் அமைதியாகக் களப்பணி ஆற்றி வரும் மூத்த தோழர் தஞ்சை கூத்தரசன் அவர்களுக்கும் சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில் ஆகஸ்ட் 5, 2023 அன்று கருஞ்சட்டை விருதுகள் வழங்கப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பரிசுகள் வழங்கிப் பேசினார். அது போது, திராவிட சித்தாந்த அமைப்புகளே திராவிட மாடல் ஆட்சியின் வழிகாட்டி என்று சொன்னது நம் போன்ற பெரியாரிய, அமைப்புகளுக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்தன. அதுமட்டுமல்லாமல் அன்று அவர் சனாதனத்தையும் ஒரு பிடி பிடித்தது, தலைநகரம் புதுதில்லி வரை எழுச்சியை ஏற்படுத்தி சங் பரிவாரங்களின் ஆத்திரத்தைக் கிளப்பியது.

2024ஆம் இவ்வாண்டுக்கான விருதுகள் தலைவர்,பொதுச் செயலாளர், மற்றும் மூவர் கொண்ட விருதுக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று தலைவரால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நம் பேரவை சார்பில் நீண்ட கால பெரியாரிய களப் பணியாளரும், நம் அமைப்பை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் பரப்புரை அலகான திராவிடப் பள்ளியை செவ்வனே நடத்திவருபவருமான தோழர் பொள்ளாச்சி உமாபதி அவர்களுக்கும், திராவிட ஆய்வியல் அறிஞரும், சிந்தனையாளரும், மறைந்த திராவிடச் சிந்தனையாளர் அய்யா ஆனைமுத்து அவர்களின் சீடரும். அவருடைய “சிந்தனையாளன்” இதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருபவருமான தோழர் வாலாஜா வல்லவன் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஆள் அரவமின்றி தன்னுடைய இலக்கியப் பங்களிப்பைச் செய்து வரும் மூத்த தோழர் கவிஞர் வெற்றியழகன் அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான கருஞ்சட்டை விருதுகள் வரும் ஜூலை மாதத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாளும், இடமும், நேரமும் பின்னர் அறிவிக்கப்பட இருக்கின்றன.

அவரவர் தனிப்பட்ட வாழ்க்கையைக் கடந்து, சக மனிதர்களை எண்ணி, எதிர்காலத் தலைமுறையினரை எண்ணி, பொதுவாழ்வில் பயணிக்க முன் வருபவர்கள் மிகச் சிலரே! அதில் குடும்ப சுமைகள் அழுத்த, தங்கள் உடல் நலனைக் கவனியாது இடையில் பின்வாங்குபவர்கள் எத்தனையோ பேர்! தொடர்ந்து தங்கள் பொருளாதாரம், நேரம், உழைப்பு ஆகிய பல வளங்களை இச்சமூகத்துக்காக ஒதுக்கியும், தியாகம் செய்தும் வாழ்ந்து கொண்டிருக்கும், போராடிக் கொண்டிருக்கும் சரியான தூய உள்ளங்களை அடையாளப் படுத்தி, அவர்களைச் சிறப்பிக்கும் இந்த உன்னத முயற்சி தொடர வேண்டும். அதுவே அம் மாமனிதர்களை ஊக்கப்படுத்தவும் தொடர்ந்து செயல்படவும் வைக்கும் பேரவையின் உயர்ந்த செயல்பாடாக இருக்கும்!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அரசியல் மாண்புக்கு இழுக்கு



*ஜார்க்கன்ட், ராம்கரில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மா, "2019 தேர்தலில் 300 இடங்களை வென்ற பாஜக அயோத்தியில் ராமர் கோயிலை கட்டியது. ஜம்மு காஷ்மீரில் 370 பிரிவை ரத்து செய்தது. குடியுரிமை திருத்த சட்டத்தை கொண்டு வந்தது. இப்போது 400 இடங்களுக்கு மேல் வென்றால் மதுராவில் உள்ள கிருஷ்ண ஜென்ம பூமியிலும், வாரணாசியில் ஞானவாபி மசூதி உள்ள இடத்திலும் கோயில் கட்டப்படும்" என்று பேசி இருக்கிறார்.*

*இப்பொழுது வடமாநிலங்களில் தேர்தல் நடந்துகொண்டு இருக்கிறது. தேர்தல் நடத்தை விதி நடைமுறையில் இருக்கிறது.*

*ஆனாலும் அதைப்பற்றி எல்லாம் கொஞ்சமும் கவலைப்படாத பா.ஜ. கவினர் தொடர்ந்து மத வெறுப்புணர்வுப் பேச்சுகளைப் பேசி வருகிறார்கள் என்பதற்கு அசாம் முதல்வரின் பேச்சு மேலும் ஒரு சான்றாக அமைகிறது.*

*இதுபோன்ற பொறுப்பற்ற பேச்சுகளால் வெறுப்புணர்வுகள் வளரும், அமைதி குலையும் என்பதைத் தெரிந்தே பா.ஜ.கவினர் இப்படிப் பேசுகிறார்கள் என்பது கவலை தருகிறது.*

*அரசியல் கட்சிகள் தங்கள் சாதனைகளைச் சொல்லி, இனி சாதிக்க இருப்பதைச் சொல்லி அமைதியாகவும், நேர்மையாகவும் மக்களைச் சந்தித்துத் தேர்தலைச் சந்திக்க வேண்டும்.*

*மாறாக இன, மத வெறுப்புணர்வைப் பேசி, அமைதியற்ற சூழலை உண்டாக்கித் தேர்தலைச் சந்திக்க நினைப்பது அரசியலின் மாண்புக்கு இழுக்காகும்.*

*அதைத்தான் தொடர்ந்து, தெரிந்தே செய்துகொண்டு இருக்கிறது பா.ஜ.க.*

*தமிழ்நாடு உள்பட்டுத் தென்னாடு மட்டுமன்று, இப்போது வடபுல மக்களும் சிந்தித்து, விழிப்படைந்து கொண்டு வருகிறார்கள்.*

*வெறுப்புணர்வுப் பேச்சுகளும், பிரித்தாளும் சூழ்ச்சிகளும் ஒருகாலத்தில் எடுபட்டு இருக்கலாம். இனிவரும் காலங்களில் அவை எடுபடாது.*

*ஒன்றியத்தில் பா.ஜ.கவின் வீழ்ச்சி உறுதியாகிறது.*



## பொதுச் செயலாளர் அறிவிப்பு!

இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டத்தின் பொறுப்பாளர்கள் சிலர், நம் பேரவையின் வேறு பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டு உள்ளதால், படிப்பு வட்டத்திற்குக் கீழ்க்காணும் பொறுப்பாளர்கள் தலைவரின் வழிகாட்டுதலின்படி, நியமிக்கப் படுகின்றனர்.

**1.சரவணப்பெருமாள்,**
**ஈரோடு**

**2.சொக்கலிங்கம்,**
**மதுரை**

**3 )முனைவர் மணிகண்டன்,**
**சிதம்பரம்.**

**4.திராவிடச்செல்வி,**
**புதுக்கோட்டை**

**- சிற்பி செல்வராஜ்**
**பொதுச்செயலாளர்**

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# விரக்தியின் விளிம்பில் மோடி...!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

இந்திய நாடாளுமன்றத்திற்கான ஏழு கட்டத் தேர்தலில் தற்போது நான்கு கட்டத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இது வரை 381 தொகுதிகளில் வாக்குப்பதிவு முடிந்துள்ளது. 400 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று முழக்கமிட்ட பிரதமர் மோடி இப்போது 200 தொகுதிகளில் கூட வெற்றி பெற இயலாது என்று கிடைத்துள்ள தகவல்களால் மிகவும் பதட்டமடைந்துள்ளார். அதன் காரணமாக அவர் முன்னுக்கு பின் முரணாக பரப்புரைக் கூட்டங்களில் பேசி வருவதை காண முடிகிறது.

அம்பானி மற்றும் அதானி என்ற இந்தியாவின் இரு பெரும் பணக்காரர்களின் அதிகாரப்பூர்வமற்ற கூட்டாளியாக இருந்த மோடி, இன்று அவர்கள் காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்திக்கு கன்டெய்னர் கன்டெய்னராக பணம் கொடுத்துள்ளார்கள் என்று பேசியிருப்பது வியப்பை ஏற்படுத்தி உள்ளது. தான் போகும் வெளிநாட்டு அரசு முறை பயணங்களுக்கு அதானியையும் உடன் அழைத்துச் சென்று ஆஸ்திரேலியாவில் நிலக்கரிச் சுரங்கம், இலங்கையில் முதலீடு என பல்வேறு தொழில் வாய்ப்புகளை அதானிக்குப் பெற்று தந்த மோடி இப்படி பேசியிருப்பதை மக்கள் நம்பத் தயாராக இல்லை. அப்படியெனில் அம்பானி - அதானி வீடுகளுக்கு அமலாக்கத்துறை மற்றும் வருமானவரித்துறையை அனுப்பி நடவடிக்கை எடுக்கத் தயாரா என்ற இராகுல் காந்தியின் கேள்விக்கு மோடியிடமிருந்து எந்த பதிலும் இல்லை.

கடந்த ஏப்ரல் மாதம் ராஜஸ்தானில் தேர்தல் பரப்புரை மேற்கொண்ட பிரதமர் மோடி, “நாட்டின் சொத்தில் இசுலாமியர்களுக்கே முதல் அதிகாரம் என்று காங்கிரஸ் ஆட்சியில் சொன்னார்கள். இதனால் இந்துக்களின் சொத்துக்கள் பறிபோகப் போகிறது. இந்துக்களின் பணத்தை எடுத்து இசுலாமியர்களுக்கு கொடுக்க நினைக்கிறது காங்கிரஸ். அவர்கள் இந்தச் செல்வத்தை அதிக குழந்தைகளைப் பெற்றவர்களுக்கும், ஊடுருவல்காரர்களுக்கும் பகிர்ந்தளிப்பார்கள். நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் ஊடுருவல்காரர்களுக்கு செல்ல வேண்டுமா? இதை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா? பெண்கள் வைத்திருக்கும் தங்கத்தைக் கணக்கிட்டு அந்த தங்கத்தை பங்கீடு செய்வோம் என்று காங்கிரசின் தேர்தல் அறிக்கை கூறுகிறது. மன்மோகன் சிங் தலைமையிலான அரசு இசுலாமியர்களுக்கு செல்வத்தில் முதல் உரிமை உண்டு என்று கூறியது. இந்த நகர்ப்புற நக்சல் சிந்தனை என் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் தாலியைக் கூட விட்டுவைக்காது" என சர்ச்சையாகப் பேசினார். ஆனால் தற்போது தான் அவ்வாறு பேசவில்லை என்று மோடி கூறியுள்ளார்.



இந்தியாவில் கிராமப்புறங்களில் வறுமைக் கோடு என்பது மாதத்திற்கு ரூ.1,059.42/- ஆகும். இந்தியாவில் நகர்ப்புறங்களில் வறுமைக் கோடு என்பது மாதத்திற்கு ரூ.1,286 ஆகும். ஆனால் வாரணாசி தொகுதியில் வேட்பு மனுவுடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் தனக்கு ரூ.3.02 கோடி மதிப்புள்ள சொத்து உள்ளதாக கூறியுள்ள மோடி தன்னை "ஏழைத்தாயின் மகன்" என்று சொல்லிக் கொள்கிறார். இனியும் இவரது நாடகத்தை இந்திய மக்கள் நம்பத் தயாராக இல்லை.

இதற்கிடையே உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மதன் லோகூர், டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி. ஷா மற்றும் இந்து என். ராம் ஆகியோர் கடந்த சில தினங்களுக்கு முன்பு பிரதமர் மோடியையும், ராகுல் காந்தியையும் வணிகம் மற்றும் கட்சி சார்பற்ற மேடையில் பொது விவாதத்தில் பங்கேற்குமாறு கடிதம் மூலமாக அழைப்பு விடுத்திருந்தனர். இதனை தொடர்ந்து அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் கட்சி, பிரதமர் மோடியுடன் நேரடி விவாதம் நடத்த இராகுல் காந்தி தயாராக இருப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆனால் பிரதமர் மோடியோ இந்த அழைப்பிற்கு எந்த பதிலையும் அளிக்க வில்லை. பத்தாண்டுகளாக பத்திரிக்கையாளர்களைக் கூட சந்திக்காத மோடி இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இதை சமாளிப்பதற்காக பா.ஜ.க இளைஞர் அணியின் தேசிய துணைத் தலைவர் ஸ்ரீ அபினவ் பிரகாஷ் இராகுலுடன் விவாதம் நடத்த முன்வந்துள்ளதாக பா.ஜ.க இளைஞர் அணி அறிவித்துள்ளது. பத்தாண்டு கால ஆட்சி குறித்து விவாதிக்க பிரதமரோ, அமைச்சர்களோ தயாராக இல்லை என்பதன் மூலம் அவர்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்பதை உணர முடிகிறது.

விரக்தியின் விளிம்பில் உள்ள மோடியும், பா.ஜ.கவும் ஆட்சியை தக்க வைக்க இனி என்ன செய்தாலும் மக்கள் மத்தியில் எடுபடாது. இன்னும் மூன்று வார காலத்தில் இந்திய ஒன்றியம் முழுமைக்கும் விடியல் வரப் போகிறது என்ற நம்பிக்கை எல்லோரின் மனதிலும் ஏற்பட்டுள்ளது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian